**பனை அபிவிருத்திச் சபை - 2010**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

---

### 1.1 அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பனை அபிவிருத்திச் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி பனை அபிவிருத்திச் சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று, நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) புத்தகப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்டதும் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வருகின்றதுமான நிலையான சொத்துக்கள் இ.க.நி இல. 18 இன் படி மீள விலைமதிக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை மீளாய்வாண்டில் ரூபா 2,497,250 இற்கு விதைகளைக் கொள்வனவு செய்திருந்தது. எனினும், இ.க.நி இல. 32 இற்கு அமைவாக அகற்றி இலாபநட்டக் கணக்கில் பதிவழிக்கும் நோக்குடன் விதைகள் உயிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பனை அபிவிருத்திச் சபை உற்பத்திக் கருமங்களில் ஈடுபட்டிருந்த போதிலும் இ.க.நி இல. 05 இன் பிரகாரம் இருப்புக்களின் சேர்மானம் வெவ்வேறாக பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய இறை வரிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பனை அபிவிருத்திச் சபையினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட ரூபா 61,420 தொகையான வைப்பு கணக்குகளிற்கு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

(இ) திகம் வடிசாராய செயற்திட்டத்தின் வருமானங்களும் செலவினங்களும் நிச்சயிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாடகை வருமானமாகிய ரூபா 2,340,000 தொகையினை தனியாக கணக்குகளிற்கு எடுத்து வருவதற்குப் பதிலாக வாடகைச் செலவினத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தமையின் விளைவாக வாடகை வருமானமும் வாடகைச் செலவினமும் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 146,818 ஆன வங்கிக் கட்டணங்கள் கணக்குகளிற்கு எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களில் பின்வரும் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 480,199 பெறுமதியான சேதமடைந்த மற்றும் அசைவுறாத இருப்புக்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) காரைநகரில் அமைந்துள்ள ரூபா 2,787,681 கிரயம் கொண்ட கைத்தொழில் கட்டிடத் தொகுதி, நெடுந்தீவில் அமைந்துள்ள ரூபா 1,131,225 கிரயம் கொண்ட

பைபர் நிலையம் என்பன கட்டிடக் கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டிருந்தன. இருந்த போதிலும் காணிகள் சபைக்கு உரித்தாக காணப்படவில்லை.

(இ) ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவினம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களின் மொத்தமாகிய ரூபா 1,096,661 தொகை குறிப்பிடப்பட்ட காலப்பகுதிகளிற்காக ஒதுக்கப்பட்டு அதற்கமைய பதிவழிக்கப்படுவதற்குப் பதிலாக அத் தொகை முழுமையாக மீண்டெழும் செலவினமாகக் கருதப்பட்டிருந்தது.

(ஈ) விரிவாக்கலிற்காகச் செய்யப்பட்டிருந்த ரூபா 13,836,894 பெறுமதியான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

(உ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களில் சேதமடைந்த 632 இருப்பு விடயங்கள் உள்ளடங்கியிருந்தன.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையே ரூபா 2,716,936 மற்றும் ரூபா 6,140,961 கூட்டுமொத்தமான கடன்பட்டோரிடமிருந்தும் கடன்கொடுத்தோரிடமிருந்தும் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அவற்றை உரிய காலத்தில் அறவிடுவதற்கும் தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதவியணிக் கடன் மற்றும் முற்பணத் தொகையான ரூபா 51,240 கடந்த பல ஆண்டுகளாக நிலுவையாக காணப்பட்டதுடன் இது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

(இ) 2008 ஆம் ஆண்டில் பதவியினை இராஜினாமா செய்திருந்த சபை உறுப்பினர் ஒருவரிடமிந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 53,730 தொகை 2011 ஜுன் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்மலானையில் உள்ள கட்டடம் 1999 இல் வெறுமையாக்கப்பட்டிருந்த போதிலும் கட்டடத்திற்காக செலுத்தியிருந்த ரூபா 75,000 தொகையான வாடகை வைப்பு அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இப் பணத்தின் அறவீடு ஐயத்திற்குரியதாகும்.

(உ) கொழும்பு அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதி அப்போதைய சமூக சேவைகள் அமைச்சிற்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 1,220,000 வாடகைப் பணம் உரிய தரப்பினர்களிடமிருந்து 2011 ஜுன் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

உறுதிப்படுத்தல்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு, பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள், கணனிகள் மற்றும் துணைச்சாதனங்களுக்கான பதிவேடுகள், வாடகை உடன்படிக்கைகள், காலப்பகுப்பாய்வு, விபரமாண பட்டோலைகள் போன்றன இன்மை காரணமாக கணக்குகளிலுள்ள இருபத்தொன்பது விடயங்களின் ரூபா 98,855,051 கூட்டுமொத்தத் தொகையினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரச்சட்டங்கள்

(i) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(பீ), 12, 13(5)(பீ) மற்றும் 14(3) ஆம் பிரிவுகள்

(ii) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் செலுத்துகை அதிகாரச்சட்டம்

(iii) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பரிவு

(iv) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பல் அதிகாரச்சட்டம்

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

------------------------------

இலக்கங்கள் 71(பீ), 110, 135, 138, 139, 177, 321(2)(சீ), 751, 756, 846 மற்றும் 959

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

------------------------------------------------------------------------------------------------------------------------

(i) VIII ஆம் அத்தியாயத்தின் 03 மற்றும் 10 ஆம் பிரிவுகள்

(ii) XIV ஆம் அத்தியாயத்தின் 03 ஆம் பிரிவு

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

--------------------------------------------------------------------------

இல. 03, 05, 16, 18 மற்றும் 32

(உ) சுற்றறிக்கைகள்

----------------------------

(i) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2007 ஜனவரி 18 ஆந் திகதிய 03 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (வெற்) சுற்றறிக்கை

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் சபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 53,500,000 அரசாங்க மானியங்களைக் கணக்கிலெடுத்ததன் பின்னர் ரூபா.14,415,133

தேறிய நட்டமாக இருந்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய நட்டம் அவ்வாண்டுக்கான ரூபா.53,000,000 மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுத்ததன் பின்னர் ரூபா. 9,644,685 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,770,448 ஆல் மேலுமோர் பின்னடைவை சுட்டிக்காட்டியது.

ஆளனி வேதனாதிகள், ஒப்பந்தச் சேவைகள் மற்றும் வழங்கல்களும் நுகர்ச்சிகளும் மீளாய்வாண்டில் முறையே ரூபா 3,327,797 ரூபா 1,621,429 மற்றும் ரூபா 6,038,112 ஆல் அதிகரித்திருந்தமையே தேறிய நட்டத்தின் அதிகரிப்பிற்கு பங்களித்திருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டுக்கான மொத்தச் செலவினம் ரூபா 88,603,343 இல் ரூபா 55,646,843 தொகை ஆளனி வேதனாதிகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்தச் செலவினத்தில் 63% இனை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(ii) சபையின் பிரதான குறிக்கோளான பனைக் கைத்தொழிலையும் பனை வளங்களையும் அபிவிருத்தி செய்தலுக்காக ரூபா 2,497,251 கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்தது. அது மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினத்தில் 3% இனை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் மூலதனச் செலவினத்திற்காக திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 30,000,000 தொகையில் ரூபா 14,415,132 தொகை பொருத்தமான அங்கீகாரமின்றி மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டுக்கான விற்பனை ரூபா 6,326,174 அதிகரிப்பைக் காட்டியிருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 11,527,539 ஆல் அதிகரித்திருந்தமையின் விளைவாக ஆண்டுக்கான தேறிய நட்டம் ரூபா 4,770,448 ஆல் அதிகரித்திருந்தது. அதன்காரணமாக விற்பனை அதிகரிப்பிலிருந்து எந்தவொறு நலனையும் பெற்றுக்கொள்வதற்கு சபை தவறியிருந்தது.

(v) மீளாய்வாண்டில் விதை நடுகைக்காக ரூபா 2,497,250 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட, நடுகை செய்யப்பட்ட

மற்றும் விநியோகிக்கப்பட்ட விதைகளின் எண்ணிக்கையினை மதிப்பிடுவதற்காக எவ்வித செயன்முன்னேற்ற அறிக்கைகளோ அல்லது புள்ளிவிபரத் தகவல்களோ கிடைக்கப்பெறவில்லை.

(vi) அநேகமான உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் வருடா வருடம் தொடர்ந்தும் நட்டத்தில் நடாத்தப்பட்டு வருவதுடன் குறைந்தது அந்நிலையங்களின் மேந்தலைச் செலவினங்களையேனும் சமாளிக்கக் கூடிய வகையில் அவை வருமானத்தை ஈட்டியிருக்கவில்லை. முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய நட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரங்கள்** | **உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களின் தேறிய நட்டம்** | |
|---|---|---|
| | **2010** | **2009** |
| | ரூபா | ரூபா |
| உற்பத்தி நிலையங்கள் | 8,726,679 | 6,731,057 |
| விற்பனை நிலையங்கள்- கற்பகம் | 3,940,488 | 4,149,551 |
| விற்பனை நிலையங்கள்- களஞ்சியங்கள் | 3,636,383 | 3,087,346 |
| பண்ணைகள் | 2,399,238 | 2,973,161 |

(vii) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கீழே விபரிக்கப்பட்டவாறு மாதிரிப் பண்ணைகள் முன்னைய ஆண்டில் ரூபா 246,565 நட்டத்தில் இயங்கியதுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 312,968 மொத்த நட்டத்தில் இயங்கி வந்திருந்தது.

| *மாதிரிப் பண்ணையின் பெயர்* | *புரள்வு* | *விற்பனைக் கிரயம்* | *மொத்த நட்டம்* |
|---|---|---|---|
| | *ரூபா* | *ரூபா* | *ரூபா* |
| வீரவில | 166,973 | 282,023 | 115,050 |
| நெடுந்தீவு | இல்லை | 5,000 | 5,000 |
| குடத்தனை | இல்லை | 84,739 | 84,739 |
| நரவெளிக்குளம் | இல்லை | 99,559 | 99,559 |
| புளியம்குளம் | இல்லை | இல்லை | 8,620 |
| | | | 312,968 |

## 2.3 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கொழும்பு அலுவலகக் கட்டிடத்தின் 3 ஆம் மாடிக்காக ரூபா 5,340,000 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கடந்த 23 மாதங்களாக சபையின் நோக்கங்களுக்காக இது பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பிலுள்ள கட்டிடத்தின் ஒரு பகுதி தனியார் ஹோட்டேல் ஒன்றிற்கும் தனியார் கடையொன்றிற்கும் மீளவும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. தனியார் ஹோட்டேல் மற்றும் தனியார் கடைக்கான மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்கள் முறையே ரூபா 890,809 மற்றும் 29,490 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. இக் கட்டணங்களை அறவிடுவதற்கான ஏற்பாடுகள் தனியார் ஹோட்டேல் மற்றும் தனியார் கடையுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் நிர்வாகக் கிரயத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 72,390,304 செலவொன்று இடம்பெற்றிருந்த போதிலும் விற்பனைப் புரள்வு ரூபா 20,010,333 மாத்திரமேயாகும். ஆண்டு முழுவதும் சபையின் நடவடிக்கைகள் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் முன்னெடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கைதடியில் பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்காக ரூபா 3,082,831 ஆன கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடமொன்று கடந்த 21 வருடங்களாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் தற்போது இக்கட்டடம் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

(ஆ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் இச் சொத்துக்கள் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக பயன்பாடற்ற நிலையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

(இ) ஒரு நீரிறைக்கும் இயந்திரம், மின்சார மோட்டார், ஒன்பது தட்டச்சுப் பொறிகள், இரண்டு அரைக்கும் இயந்திரங்கள், ஐந்து உணவுப் பதப்படுத்துகை அலகுகள் மற்றும் ஒரு பாதுகாப்பு மானி இயந்திரம் என்பன குறிப்பிடத்தக்களவு காலம் யாழ்ப்பாண பிரதான களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

## 2.5 வாகனப் பாவனை

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமாக 20 வாகனங்கள் காணப்பட்டன. நிதிப் பிரமாணம் 1646 இன் பிரகாரம் இவ் வாகனங்களிற்கான மாதாந்த செயலாற்றுகைப் பொழிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டவில்லை.

(ஆ) வாகனங்களின் எரிபொருள், திருத்தங்கள் மற்றும் பேணுகைக்காக ரூபா 845,953 தொகை செலவிடப்பட்டிருந்தது. வாகனத் திருத்தங்களைப் பதிவுசெய்வதற்காக சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகன ஓட்டப்பதிவேடுகளில் பயணத்திற்கான நோக்கம், பயணித்த நேரம், எரிபொருள் நிலைமை, எரிபொருள் தாங்கியின் கொள்ளளவு, சாரதியின் கையொப்பம் போன்றன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நாளாந்த வாகன ஓட்டப்பதிவேடுகள் முறைப்படி பேணிவரப்பட்டிருக்கவில்லை. அதாவது செயலாற்றுகை மைல்கள் மற்றும் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரின் ஒப்பங்கள் வாகன ஓட்டப்பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) எரிபொருள் கட்டளைப் புத்தகத்திலிருந்து வாகனங்களிற்கான எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக சாரதிக்கு ஏற்பட்டிருந்த செலவினம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 2.6 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள்

---

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) காரைநகரில் கைத்தொழில் பேட்டைக்கான கட்டிட நிர்மாணிப்பிற்காக 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 2,500,000 தொகையான ஆயத்தப்படுத்தல் முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் நிர்மாண வேலைகள் 2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தினை தொடர்வதற்காக எவ்வித நிதிகளும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என இது தொடர்பாக தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மன்னார் மாவட்டத்தில் பனஞ்சாராயம் வடிகட்டுதல் மற்றும் பனங்கள்ளினை போத்தலில் அடைத்தல் பொறியினை நிறுவுவதற்காக ‘‘மஹிந்த சிந்தனை’’ துரித நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகயில் ரூபா 500,000 செலவு செய்யப்பட்டிருந்த மேற்குறித்த வேலைகள் 2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது செயற்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டியது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(எ) பிரிவின் பிரகாரமான எனது விரிவான அறிக்கையின் மூலம் சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மனித வள முகாமைத்துவம்

(ஆ) நிதியங்களின் பயன்படுத்துகை

(இ) கணக்கீடு

(ஈ) பாதீடு

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) வாகனங்களின் பயன்பாடு